## கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 22/2020

பிரதிவாதி தரப்பு சாட்சி -1 ராமலிங்கம் திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 08.11.2024 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமலிங்கம் | கிராமம் | |
| த/பெ / க/பெ. | வேலாயுதம் | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | 60 |

**குறுக்கு விசாரணை**

1. தாவா சொத்து பண்ணைப்பட்டி கிராமம், கடவூர் தாலுகாவில் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.706/9 , 706/10 ஆகியவை தாவா சொத்தின் சர்வே எண் என்றால் சரிதான். இவ்வழக்கிற்கு முன்பு வாதி மீது நான் அசல் வழக்கு எண். 228/2017 வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். இரண்டு வழக்குகளிலும் உள்ள சொத்து ஒன்று தான் என்றால் சரியல்ல. அதுவேறு இது வேறு. அந்த வழக்கின் சர்வே எண் என்ன என்றால் தெரியவில்லை. அந்த வழக்கை வாதி வடிவேல் எனக்கு தொந்தரவு கொடுக்க கூடாது என்று தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். 2017 ம் வருடம் நான் வாதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்த போது தான் புதிதாக கட்டிடம் கட்டினேன் என்றால் சரிதான். நான் யாரிடமிருந்து சொத்து வாங்கினேன் என்றால் 2012 ம் ஆண்டு ரெங்கன் என்பவரிடமிருந்து கிரையம் வாங்கினேன். கிரையம் வாங்கும் போது சொத்தில் கட்டிடம் இருந்ததா என்றால் இல்லை காலி இடம் தான். ரெங்கனுக்கு சொத்து எப்படி பாத்தியம் என்றால் அது பற்றி தெரியாது.

2. எந்த ஆவணத்தின் படி கிரையம் வாங்கினேன் என்றால் மூல பத்திரம் கொடுத்தார். மூல பத்திரம் எந்த தேதி எந்த சர்வே எண் என்றால் நியபாகம் இல்லை,. மூல பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொத்தை வாங்கும் போது அளந்து பார்த்து வாங்கினேனா என்றால் அளந்து பார்த்தேன். யாரை வைத்து அளந்தேன் என்றால் பத்திர எழுத்தரை வைத்து அளந்தேன். சொத்தை வாங்கிய பிறகு கட்டிடம் கட்டும் போது அனுமதி வாங்கினேனா என்றால் வாங்கினேன். பட்டா என் பெயருக்கு வாங்கி யுள்ளேனாஎ ன்றால் வாங்கியுள்ளேன். பட்டாவில் உள்ள விவரங்கள் சரியாக உள்ளதா என்றால் உள்ளது. சொத்தின புல வரைபடம் வாங்கி பார்த்தேனாஎ ன்றால் நியாபகம்

இல்லை. கட்டிடம் கட்டுவதற்கு வாங்கிய அனுமதி வரைபடம் வைத்துள்ளேனா என்றால் இல்லை.

3. எனது கட்டிடத்திற்கு வடபுறம் கிழமேல் மெயின் ரோடு உள்ளது என்றால் சரிதான். கட்டிடத்திற்கு கிழக்கே தான் தாவா சொத்து என்றால் சரிதான். தாவா சொத்திற்கு வடக்கே கிழமேல் ரோடு உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு கிழக்கே காலி மனை உள்ளது என்றால் சரிதான். வடிவேல் சொத்திற்கு தெற்கே யார் இருக்கிறார் என்றால் தெரியவில்லை. தாவா சொத்திற்கு தெற்கே வீடு உள்ளதா என்றால் சிறிகு காலி இடம் உள்ளது. அதற்கு அடுத்து வீடு உள்ளது. வழக்கு சொத்தில் என்ன உள்ளது என்றால் வாங்கும் போது கட்டிடம் இருந்தது. தற்போது இடித்து காலியாக உள்ளது. எனது சொத்தின் சர்வே எண் வேறு தாவா சொத்தின் வேறு என்றால் சரிதான். எனது வீடு முக்கோண வடிவில் கட்டியுள்ளேனா என்றால் இல்லை., நேராக தான் கட்டியுள்ளேன். எனது கட்டிடத்தில் பேக்கரி வைத்துள்ளேனா என்றால் ஆமாம். வாதி நிலத்தை அளக்க வேண்டுமென என்னிடம் கேட்டாரா என்றால் இல்லை.

4. வட்டாட்சியர் அலுவலகத்தில் நிலத்தை அளக்க மனு கொடுத்தாரா என்றால் அது பற்றி தெரியவில்லை. வாதி நிலத்தை அளக்க முயன்ற போது நீதிமன்றத்தில் நான் முன்னெச்சரிக்கை மனு தாக்கல் செய்தேனா என்றால் பிரச்சனை செய்ததால் தாக்கல் செய்தேன். வாதி உயர் நீதிமன்றத்தில் நிலத்தை அளக்க வேண்டுமென நீதிபேராணை மனு தாக்கல் செய்தாரா என்றால் அது பற்றி தெரியாது. உயர் நீதிமன்றத்தில் நான் ஆஜராகவில்லை என்றால் சரிதான். வாதி உயர் நீதிமன்றத்தில் நிதிபேராணை மனு தாக்கல செய்த பின்னிட்டு நான் அ.வ.எண்.228/2017 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி நீதிபேராணை மனுவில் அ.வ.எண்.228/2017 ல் பார்த்துக்கொள்ளுமாறு சொன்னார்களா என்றால் அது பற்றி தெரியாது. நீதிமன்றத்தில் இருந்து நீதிமன்ற ஆணையர் வாதி, அவருடைய வழக்கறிஞர் அனைவரும் வந்து நிலத்தை அளந்தார்களா என்றால் அது பற்றி தெரியாது. எந்த ஆவணத்தின் அடிப்படையில் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியவில்லை. இந்த வழக்கில் வாதி என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்தார் என்பதை பார்க்காமல் தான் நான் பதிலுரை மற்றும் வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

5. தாவா சொத்தின் சர்வே எண் 76/9 மற்றும் 76/10 ல் எனக்கு எ ந்த உரிமையும் இல்லை என்றால் சரிதான். சர்வே எண் 76/9 மற்றும் 76/10 ல் நான் ஏதேனும் கட்டிடம் கட்டியிருந்தால் தவறு என்றால் நான் மேற்படி சர்வே எண்களில் கட்டிடம் கட்டவில்லை. நான் வாதியின் இடத்தில் நான் ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டியிருந்தால் அதை அப்புறப்படுத்த எனக்கு ஏதேனும் ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை. ஆனால் நான்

ஆக்கரமிப்பு செய்யவில்லை. தாவா C பட்டியல் சொத்தில் நான் வாதியின் சொத்தை ஆக்கிரமித்து கட்டிடம் கட்டியுள்ளேன் என்றும், அதை இடித்து கொடுக்க கடமைபட்டவன் என்றால சரியல்ல. இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் பார்த்தேனா எ ன்றால் இல்லை. நீதிமன்ற ஆணையர் நிலத்தை அளந்து தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளோம் என்றால் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு எழுத்துபூர்வமான ஆட்சேபனை செய்துள்ளேனா எ ன்றால் இல்லை.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Addtional District Munsif,**
**Kulithalai.**